கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச
சிறுதானிய ஆண்டு
2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 18.12.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு கையால் இயக்கப்படும் பழ அறுவடை மற்றும் பாலிதீன் உறைகளை பொருத்தும் கருவி

காப்புரிமை அலுவலகம், வடிவமைப்புகள் மற்றும் வர்த்தக முத்திரைகளின் கட்டுப்பாட்டாளர் ஜெனரல் (கொல்கத்தா), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு மாம்பழ உறையிடு மற்றும் அறுவடை இயந்திர கண்டுபிடிப்புக்கான வடிவமைப்பு காப்புரிமையை வழங்கியுள்ளார்.

இந்த புதுமையான இயந்திரம் இரட்டை நோக்கதோடு வடிவமைக்கப்பட்டுள்ளது: இது மரத்திலுள்ள மாம்பழங்களை பைகளில் உறையிடுவதற்கும், முதிர்ந்த பழங்களை அறுவடை செய்வதற்கும் உதவுகிறது. இந்த இயந்திரம், உறையிடும் பிரிவு, அறுவடை பிரிவு, தேவைக்கேற்ப உயரத்தை மாற்றிகொள்ளும் வகையிலான கம்பம், கைப்பிடி முதலிய பாகங்களை கொண்டுள்ளது. கம்பத்தின் உயரம் 4.5 மீட்டர் வரை நீட்டிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, இது மாம்பழ அறுவடைக்கு பயனுள்ளவாறு அமைகிறது. இந்த கருவி இயந்திரங்களால் பழத்தில் காயங்கள் ஏற்படும் அபாயம் குறைவாகவும், எளிதாகவும் பழங்களை அறுவடை செய்ய உதவுகின்றது. கைகளுக்கு எட்டாத அல்லது பறிக்க இயலாத வகையில் உள்ள பழங்களையும் பைகளில் அடைத்து அறுவடை செய்ய உதவும் வகையில் அமைகிறது. பழங்களை முதிர்ச்சியடையும் போது பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க உதவுகிறது. இந்த கருவி பயன்பாட்டின் மூலம், மாம்பழங்களின் தரம் கணிசமாக உயர்வது கண்டறிப்பட்டுள்ளது.





மக்கள் தொடர்பு அலுவலர்